திருவள்ளுவர் ஆண்டு 2056 18.06.2025

# உலகத்தமிழ்

இதழ் உஅகூ (289)

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்



வளர்பிறை போல வழிவழிப் பெருகி எனத் தொடங்கும் பெருங்கண்ணனாரின்
குறுந்தொகைப் பாடல் எண் இரு நூற்(று) எண்பத்(து) ஒன்பது;

வளர்பிறை போல வளர்ந்தோங்கித் தமிழ் மணம் பரப்பும்
உலகத்தமிழிதழ் இருநூற்(று) எண்பத்(து) ஒன்பது.

# உள்ளடக்கம்


1. கொள்கை விளக்கக் குறிப்பு 4

2. நூலேணி (உலகத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்) 5

3. நூலேணி

(உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்) 6

4. தமிழெழுச்சி 7

5.அறுசுவை உணவு தினம் 8

6. அவ்வப்போது! 9

7. தேன்துளி! 10

8. சேரமன்னர் வரலாறு! 11

9. குறளமுதம் 12

10. ஆழங்கண்ட ஆளுமையர்! 13

11. நற்றிணை – ஆங்கிலம் 14

12. குழந்தைக் கவிஞர் பரம்பரை! 15

13. கல்வி என்பது பெருங்கடல் 16

உள்ளடக்கம்


14. Brief Life Sketches Of The European Scholars 18

15. வள்ளுவம்! 19

16. தமிழன்னை நான்மணிமாலை! 20

17. பரிபாடல் – நூற் சிறப்பும் பாநயமும்! 21

18. மலாயா ஆவணங்கள்! 22

19. பூ மழை 24

20. குறள் தரும் சொற்சுவையும் பொருட்சுவையும் 29

21. அறிவோம்! 30

22. கணினித் தமிழ் 31

23. எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே! 33

24. செய்தி வெளியீடு! 34

25. சட்டவியல் அகரமுதலி! 35

26. புகழ் வணக்கம்! 36

## இயல் - 1 (தமிழ் வளர்ச்சித் துறை)

### இ) தலைவர்களின் பிறந்தநாளில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் பேச்சுப் போட்டி நடத்துதல்


"நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துகளையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் ஆண்டுதோறும் அவர்களது பிறந்தநாளில் அனைத்து மாவட்டங்களிலும் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசும் பாராட்டுச் சான்றிதழும் 2021-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், பேச்சுப் போட்டியில் அரசுப்பள்ளி மாணவர்களைச் சிறப்பிக்கும் வகையில் அவர்களுக்குத் தனியே சிறப்புப்பரிசு இரண்டு மாணவர்களுக்கு ரூ.2000/- வீதம் வழங்கப்படுகிறது.

### c) Conducting District level Elocution competition for school and college students on the Birthday Anniversaries of National Leaders.


*Elocution competitions for college and school students at the District level are conducted every year on the Birth Anniversaries of the leaders such as Mahatma Gandhi, Jawaharlal Nehru, Annal Ambedkar, Thanthai Periyar, Perarignar Anna and Muthamizarignar Kalaignar who strove hard for our nation, in order to make the younger generation aware of the views and social thoughts of these leaders and Prizes and Certificates of Appreciation are distributed to the students from the year 2021 onwards. Special prize in Elocution competition has also been created exclusively for Government school students with the cash award of Rs.2,000/- per student in order to encourage them.*

# நூலேணி

## உலகத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்




| | |
|---|---|
| நூலின் பெயர் | உலகளாவிய தமிழ் வளர்ச்சி |
| தொகுப்பாசிரியர் | முனைவர் க.பசும்பொன் |
| பதிப்பாண்டு | *2014* |
| விலை | *ரூ.100/-* |
| பக்கங்கள் | *128* |




| | |
|---|---|
| நூலின் பெயர் | சங்கத் தமிழர் பண்பாடு |
| தொகுப்பாசிரியர் | முனைவர் க.பசும்பொன் |
| பதிப்பாண்டு | *2014* |
| விலை | *ரூ.85/-* |
| பக்கங்கள் | *124* |




| | |
|---|---|
| நூலின் பெயர் | பன்னாட்டுத் திருக்குறள் மாநாட்டுச் சிறப்பு மலர் |
| தொகுப்பாசிரியர் | முனைவர் க.பசும்பொன் |
| பதிப்பாண்டு | *2014* |
| விலை | - |
| பக்கங்கள் | *619* |




| | |
|---|---|
| நூலின் பெயர் | மலேசியத் தமிழ் மாணவர்கள் தமிழ்க் கற்றலில் உள்ள சிக்கல்களும் தீர்வுகளும் |
| தொகுப்பாசிரியர் | முனைவர் க.பசும்பொன் |
| பதிப்பாண்டு | *2015* |
| விலை | *ரூ.110/-* |
| பக்கங்கள் | *160* |




# நூலேணி

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

123





| | |
|---|---|
| நூலின் பெயர் | இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி |
| நூலாசிரியர் | பெ. சுயம்பு |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.35/- |
| பக்கங்கள் | 127 |
| வெளியீட்டு எண் | 528 |




| | |
|---|---|
| நூலின் பெயர் | வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை |
| பதிப்பாசிரியர் | எஸ்.கண்ணன் |
| பதிப்பாண்டு | 2005 |
| விலை | ரூ.25/- |
| பக்கங்கள் | 82 |
| வெளியீட்டு எண் | 529 |




| | |
|---|---|
| நூலின் பெயர் | தமிழில் பிற துறைக் கோட்பாட்டாய்வுகள் வரலாறும் மதிப்பீடும் |
| பதிப்பாசிரியர் | முனைவர் ம. மதியழகன் |
| பதிப்பாண்டு | 2005 |
| விலை | ரூ.25/- |
| பக்கங்கள் | 73 |
| வெளியீட்டு எண் | 530 |




| | |
|---|---|
| நூலின் பெயர் | தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் |
| நூலாசிரியர் | சா. கிருட்டினமூர்த்தி ச. சிவகாமி |
| பதிப்பாண்டு | 2005 |
| விலை | ரூ.30/- |
| பக்கங்கள் | 104 |
| வெளியீட்டு எண் | 531 |

169



## கண்ணன் பாட்டு

### கண்ணன் என் தோழன்

பொன்னவிர் மேனிச் சுபத்திரை மாதைப்
புறங்கொண்டு போவதற்கே -- இனி
என்ன வழியென்று கேட்கில் உபாயம்
இருகணைத் தேயுரைப் பான்; -- அந்தக்

– பாரதியார்



## புரட்சிக் கவி

ரத்தவெறி கொண்டலையும் ராசன்மனம் ஏனிரங்கும்?
அத்தருணம் அந்த அமுதவல்லி ஏதுசொல்வாள்:
வாளை உருவிவந்து மன்னன் எனதுடலை
நாளையே வெட்டி நடுக்கடலில் போடட்டும்,

– பாரதிதாசன்

# அறுசுவை உணவு தினம்

"வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் – இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்"

என்பான் மகாகவி பாரதி. மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவே ஆகும். இயற்கை மனிதனைப் படைப்பதற்கு முன்னே அவனுக்குத் தேவையான உணவுகளைப் படைத்துவிட்டது. ஆதிமனிதன் இலை தழைகளை ஆடைகளாக உடுத்தி நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டான்.



நீர் முதலிய அத்தியாவசியத் தேவைகளுக்காக ஆற்றங்கரை நாகரிகங்களை வளர்த்து, நெருப்பின் பயனை அறிந்து காய்கறிகள் மட்டுமல்லாது இறைச்சிகளையும் நெருப்பில் சமைத்து உண்டும் பசியாறிய மனிதன், இவ்வுலகில் நாவின் சுவையான இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என அறுசுவைக்கும் முக்கியத்துவம் தந்தான். தமிழரின் பண்பாட்டை ஒற்றை வார்த்தையில் கூற வேண்டும் என்றால் இலக்கியங்கள் அனைத்தும் ஒரு சேர எழுப்பும் குரல் 'விருந்தோம்பல்' என்பதே ஆகும்.

இன்றைய நவீன உலகில் உணவின் வகைகளும் அவற்றின் பெயர்களும் ஏராளமாக இருந்தாலும் எத்தகைய உணவு தயாரித்தாலும் அது அறுசுவைக்குள்தான் இருக்கும் என்பதே நமது முன்னோர்கள் வகுத்த நியதியாகும். ஆறு சுவைகளுடன் கூடிய உணவே முறையான உணவு என்று தமிழ் இலக்கியம் கூறுகிறது. நாக்கு அறியக் கூடிய சுவை ஆறு என்று தமிழ் மருத்துவமும் கூறுகிறது. உடலை இயக்குகின்ற தாதுக்களுடன் அறுசுவையும் இணைந்து நமது உடலைத் திடமாக வைக்க உதவுகிறது. இரத்தம், தசை, கொழுப்பு, எலும்பு, நரம்பு, உமிழ்நீர் என்ற ஆறு தாதுக்களால் ஆனதே நம் உடலாகும். இந்த ஆறு தாதுக்களும் சரியான அளவில் உடலில் இருக்க வேண்டும். அவற்றைச் சரிவர இருக்கச் செய்வது இந்தஅறுசுவையே ஆகும்.


திரிகடுகம், சிறுபஞ்சமூலம் உள்ளிட்ட நூல்களும் திருக்குறளுமே எப்படி உணவு உட்கொள்ள வேண்டும்? எவ்வகையான உணவினைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற செய்தினைச் சொல்கின்றன.

அந்த வகையில் சர்வதேச நீடித்த அறுசுவை உணவு நாள் ஜூன்18 அன்று உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் நமக்குப் பிடித்த உணவுகளைப் பகிரிந்து உண்போம்...

**********



- முனைவர் ஔவை அருள்




முனைவர் ஔவை அருள்
இயக்குநர்

தமிழ் வளர்ச்சித் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
தமிழ்ச் சாலை, எழும்பூர்,
சென்னை – 600 008.

நாள்: 10.06.2025

## கவிப்புதையல்

**"குயில் கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகந்த மயில் ஆடிக்கொண்டிருக்கும்; வாசமுடைய நற்காற்றுக் குளிர்ந்தடிக்கும்"**

அவ்வண்ணமே, கவியருவிச் செம்மல் அருட்சுடர் ஞான ஆனந்தராசர் தம் அருட்பணியிலும் நற்கவிதைகளைப் படைத்துக் கொண்டேயிருப்பார்.

பேரறிஞர் கால்டுவேலரைக் குறித்து நுண்ணாய்ந்து நாடெங்கும் அவரின் புகழைப் பரப்பிவரும் கவிஞர் தன்னுடைய 33 கவிதை நூல்களைத் தாண்டி புதிய படைப்பாக **"கவிதேவதை"** எனும் அருமைக் கவிப் பனுவலைப் படைத்துள்ளார்.

பாவங்களால் தான்
பாதையே அமைந்திருக்கிறது.

பேச்சாளன்–மக்களின்
மூச்சாளன்

ஆசிரியர்கள்
திருத்தும்போது
இதன் மதிப்பீடு
உயரும்

வடிவங்கள்
வெவ்வேறானாலும்
உருவம் ஒன்று

என்றெல்லாம் பட்டுத்தெறிக்கும் அழகிய வரிகளைத் தன்னுடைய கவிதை ஊர்வலத்தில் தனி மணம்பரப்பும் மகரந்த வரிகளைக் கண்டு மலைத்தேன்.

இலக்கிய உலகில் இணையற்றப் பெருமையை தன் கவித்திறனாலும் சொல் வளத்தாலும் பெற்று புலமைத் திலகமாகத் திகழும் அருட்சுடர் ஞானஆனந்தராசர் அவர்களின் எழுத்தாற்றல் வெல்க.

(ந. அருள்)

அலைபேசி: 98410 26043, மின்னஞ்சல்: dr.n.arul@gmail.com




## தேன்துளி - 1



*37 ஆண்டுகளுக்கு முன்பு முதன்முறையாக தென்னாப்பிரிக்காவுக்கு எந்தையார் பேரறிஞர் ஔவை நடராசன் அவர்கள் ஏர் மொரீஷியஸ் வானூர்தியில் பம்பாய் - மொரிஷியஸ் வழியாக தென்னாப்பிரிக்காவில் உள்ள டர்பனுக்கு வருகை புரிந்தபோது, திரு.சந்துரு பிள்ளை அவர்கள் விமானத்தில் அப்பா அமர்ந்திருக்கும் இருக்கைக்கே நேரில் சென்று அப்பாவிற்குக் கைகுலுக்கி வணக்கம் தெரிவித்துத் தன்னை அறிமுகம் செய்து கொண்டது மட்டுமின்றி, மிகுந்த மரியாதையுடன் சிவப்புக் கம்பள வரவேற்பு வழங்கி அவரைப் பெருமிதப்படுத்தினார். இது நடந்து சில ஆண்டுகள் கழித்து அதே சந்துரு பிள்ளை சென்னை வந்த பொழுது, நன்றி பாராட்டும் விதமாக, அறிஞர் ஔவை நடராசன் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அவரை வரவேற்றுச் சுழல் சிவப்பு விளக்கு மரியாதையுடன் அரசு சீருந்தில் தகுந்த மரியாதையுடன் விருந்தினர் இல்லத்தில் தங்க வைத்தபோது, தான் சிலிர்த்துப் போனதாகச் சந்துரு பிள்ளை என் தம்பி பரதனிடம் நினைவுகூர்ந்து பெருமகிழ்ச்சி அடைந்தாராம்.*

## தேன்துளி - 2

**மதுரை புதுமண்டபத்தின் ஊஞ்சல் தூண்கள்**



*உள் மண்டபத்தின் மேற்கு பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள கருப்புக்கல் சவுக்கைக்கு 16 அடி முன்னால் அமைக்கப்பட்டுள்ள இந்த ஊஞ்சல் தூண்கள் அக்காலத்தில் இறைவன் இறைவியை ஊஞ்சலில் வைத்து வணங்குவதற்காக அமைக்கப்பட்டதாகும். தற்பொழுது இவ்வழக்கம் இல்லை.*

*ஒவ்வொரு தூணும் பளபளக்கும் கருப்புக்கல்லில் 15 அடி உயரமாகவும் 5 அடி சுற்றளவு கொண்டதாகவும் உள்ளது. இரண்டு தூண்களுக்கும் இடையே உள்ள இடைவெளி 15 அடியாகும். இடது பக்கத் தூண் நான்கு பகுதிகளையும் வலது பக்க தூண் இரண்டு பகுதிகளையும் கொண்டுள்ளது. இதன் மேல் எண் கோண வடிவிலான கருங்கல் கட்டுமானத்தை வைத்து, அதை இணைக்கும் மரப்பகுதியை ஒரே மரத்தில் செய்துள்ளனர். அதிலும் மர வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

## முடிப்புரை

இந் நினைவுகளால் அவள் உள்ளத்தில் தன் மகள் சென்ற வழியின் வெம்மையும் அருமையும் தோன்றவே அவற்றைப் பொறுக்கலாகாத மகளது மென்மையும் உடன் தோன்றுவதாயிற்று. அதனால், உளம் புழுங்கி, இவ் வழிகள் அவளுடைய "நல்லடிக்கு அமைந்தன் வல்ல; மெல்லியல்; வல்லுநள் கொல்லோ?" என்று சொல்லிக் கதறிக் கண்ணீர் சொரிகின்றாள். அதனை, தன் நெஞ்சில் தோன்றிய முறையிலேயே, அவள்,

"ஓங்குவரை அடுக்கத்து உயர்ந்த சென்னி
மீனோடு பொலிந்த வானின் தோன்றித்
தேம்பாய்ந்து ஆர்க்கும் தெரியிணர்க் கோங்கின்
காலுறக் கழன்ற கள்கமழ் புதுமலர்
கைவிடு சுடரின் தோன்றும்
மைபடு மாமலை விலங்கிய சுரனே"

என்று சொல்லுகிறாள். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த செவிலியோ மகளது காதலொழுக்கத்தை அறிந்தவள். "தெரியிணர்க் கோங்கின், காலுறக் கழன்ற கள்கமழ் புதுமலர், கைவிடு சுடரின் தோன்றும்" என்று அவன் கூறியதையே எடுத்துச் சொல்லி, காற்று வீச இணர்களிலிருந்து கழன்று வீழும் புதுப் பூ கை விளக்குச் சுடர்வது போல ஒளிவிடும் என்றாயன்றோ! கோங்கு போன்ற நின்பால் தோன்றி முதுக்குறைவு முற்றிய நின் மகள் காதற்செவ்வி அலைத்தலால் தனது பிறந்த இல்லினின்றும் நீங்கித் தன் காதலுனுடன் சென்றது, யாவரும் புகழ்தற்குரிய சிறந்த கற்பொழுக்கமாயிற்று என்று இயம்பித் தாயைத் தேற்றினாள். இச் செய்தியை உய்த்துணருமாறு வைத்த இந்த இளங்குட்டுவனது புலமை நலத்தை நோக்கின், இச் சேரமான் நல்லரசு நடத்தி நல்லோர் பரவ வாழ்ந்த பெருந்தகை என்பது தெளிய விளங்குகிறது. தான் கூறுவதைக் கேட்போர் உள்ளத்தில் எழக்கூடிய கருத்துகளை, அந் நெறியிலே முன்னுணர்ந்து அவற்றுக்கு ஏற்ற சொற்களைத் தொடுப்பது ஒன்றே இதற்குப் போதிய சான்று பகர்கின்றது.

வளரும்...

திருக்குறள் அறத்துப்பால்

– நாகை சொ. தண்டபாணிப்பிள்ளை

## 10. திருக்குறள் விரிவுரை (1939 - திரு.வி.க)

### வரலாறு

உலகுக்கு ஒரு நூலை அருளிய திருவள்ளுவரது உண்மை வரலாறு நமக்குத் தெரியவில்லை. 'இப்போது வழங்கி வரூஉம் அவர்தம் வரலாறு, பின்னே புனையப்பட்டது. பல தமிழாசிரியரது வரலாறுகள் சரித்திர முறையில் நமக்குக் கிடைக்கவில்லை.' இது நாடு செய்த பாவம். 'சரிதம்' என்னும் பெயரால் புனைந்துரைகளே பெரிதும் நாட்டில் உலவுகின்றன. அவரவர் அருளிய நூலைக்கொண்டே அவரவர் நிலையை ஊகித்து உணரவேண்டுவது அறிஞர் கடமை.

திருவள்ளுவர் யாத்த திருக்குறள் என்னும் தமிழ்ப் பொது நிலையம் எல்லார்க்குங் காட்சி வழங்குகிறது. அந்நிலையத்தைப் பார்ப்போம்; அதனுள் புக முயல்வோம்; முயன்று புகுந்தால் திருவள்ளுவரைக் காணலாம். திருவள்ளுவர் இறந்துபட்டாரில்லை. அவர் உயிருடன் திருக்குறள் நிலையத்தில் வீற்றிருக்கிறார். உலகீர்! அவரைக் காண எழுக; எழுக.

### வைப்புகள்

ஒரு நிலையத்தில் புகுந்து, அதன்கண் வாழ்வோரைக் காணுதற்குப் பல வாயில்களைக் கடத்தல் வேண்டும் திருக்குறள் நிலையத்துக்கும் பல வாயில்கள் உண்டு. அவையே திருக்குறளிலுள்ள வைப்புகள். அவற்றைப் பார்ப்பதால், போற்றுவதால் அல்லது ஓதுவதால் மட்டும் அவை திறந்து வழி காட்டா. அவற்றைப் பயின்று பயின்று, அவற்றின் பொருளை உணர்ந்து உணர்ந்து, அவற்றின்படி வாழ்வு நடத்தல் வேண்டும். இவ்வாழ்வினரை வரவேற்க வாயில்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. வாயில்கள் வழிகாட்டும்; திருவள்ளுவரிடஞ் சேர்க்கும்.

### உரையாசிரியர்

திருவள்ளுவரைத் தாங்காணவும் பிறர்க்குக் காட்டவும் உழைத்தவர் பலர். பலருள் குறிக்கத்தக்கவர் பதின்மர். அப்பதின்மர் பெயர்களை,

**தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்**
**பரிமே லழகர் பரிதி – திருமலையர்**
**மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்**
**கெல்லை யுரையெழுதி னோர்**

என வரூஉம் வெண்பா தெரிவிக்கிறது.

வளரும்...



# ஆழங்கண்ட ஆளுமையர்... 91

- ஔவை நடராசன்

## காலம் மறக்காத பாலசுந்தரம்

அவர் என்னுடைய நெருங்கிய நண்பர். முதலாம் ஆண்டில், நாங்கள் ஒரே அறையில் தங்கியிருந்தோம். அடுத்த ஆண்டு, நான் வேறு அறைக்குப் போய்விட்டேன். ஏன் அவருக்கு நீக்கம் நேர்ந்தது என்று, எனக்கு இன்று வரை தெரியாது. அவரும் இது பற்றி, என்னிடத்தில் ஒரு சொல் கூட சொன்னதில்லை. எல்லோருக்கும் பெரிய வியப்பு. மு. வரதராசனார் தன் வாழ்வில், ஒரு மாணவனின் வாழ்க்கையைச் சீர்குலைத்து விடுவார் என்பதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

இரண்டு நாள்கள் கழித்து, பாலசுந்தரத்தின் அண்ணன் வந்தார். அவர் ஒரு தொழிலதிபர். அவருடைய இன்னொரு இளவலும் வந்தார். மு.வ.வைப் பார்க்க, நான் கலக்கத்துடன் சென்றேன். என்னைப் பார்த்தவுடன், நீ வருவாய் என்று எனக்குத் தெரியும் என்றார்.

சிறிது நேரம் என்னுடன் பேசினார். பாலசுந்தரத்தின் நன்மை. கருதித்தான், நான் அவனை நீக்கம் செய்தேன். எந்தக் காலத்திலும், எந்த நிலையிலும் இதை மாற்ற முடியாது. நீங்கள் போகலாம் என்று சில நொடிகளில் சொல்லி அனுப்பிவிட்டார்.

மு.வ.வைப் பற்றி, ஒரு சொல் கூட இன்றுவரை குறை சொல்லாதவர் நண்பர் பாலசுந்தரம். அந்த நிகழ்ச்சி நடந்த பின்பும், அவர் எதுவும் சொன்னதில்லை. அதன்பின்பு, அவர் மதுரை தியாசராசர் கல்லூரியில், எம்.ஏ., வகுப்பில் சேர்ந்தார். பிறகு, ஒரு கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றி, இப்போது ஓய்வும் பெற்றுவிட்டார்.

நான் ஏன் இதனைச் சொல்கிறேன் என்பதற்குக் காரணம் இருக்கிறது. ஏன் பச்சையப்பன் கல்லூரியில் இருந்து விலக்கப்பட்டார் என்று, அவர் இதுவரை ஒரு வார்த்தைகூட, என்னிடம் சொன்னதில்லை. அதைப்பற்றி, மு.வ.வும் ஒரு சொல் சொன்னதில்லை. எங்களுக்கும் ஏன் என்று இதுவரை தெரியவில்லை.

சில ஆண்டுகள் கழித்த பிறகு, நான் அரசுத் துறையில் பணியாற்ற வந்தேன். அப்போது டாக்டர் மு.வ., மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்தார்.

...வளரும்

## நற்றிணை - 363

தோழி தலைவனிடம் கூறுதல்

நெய்தல்

உலோச்சனார்

"கண்டல் வேலிக் கழி சூழ் படப்பைத்
தெண் கடல் நாட்டுச் செல்வென் யான்" என
வியம் கொண்டு ஏகினை ஆயின், எனையதூஉம்
உறு வினைக்கு அசாவா உலைவு இல் கம்மியன்
பொறி அறு பிணைக் கூட்டும் துறை மணல்
கொண்டு
வம்மோ தோழி! மலி நீர்ச் சேர்ப்ப
பைந் தழை சிதைய, கோதை வாட,
நன்னர் மாலை, நெருநை, நின்னொடு
சில விளங்கு எல் வளை ஞெகிழ,
அலவன் ஆட்டுவோள் சிலம்பு ஞெமிர்ந்து எனவே.

## Natrinai - 363

Friend speaks..

neytal

ulocchanAr

O, Littoral Lord! Screwpine toggery
got torn; yester–evening ere nightfall;
in her crab canon move with thee;
slipped bangles; split anklets all;

smiths remake her leg strings!
clay kiln cum chimney fresh
to pipe flame on broken things!
From thine screwpine shore slush,

fetch clay for furnace special
for remake and ..thy rehearsal!

To Continue...

*Prof Sanakaranarayanan is a retired professor in english and a doyen in english language and letters,besides his eminence in tamil and sanskrit,his knowledge of english is surpassing,the difficulty is he always make a fish to roar like a lion! his pedantic style is inevitable. Keep a dictionary read his lines.*

*He has attempted renderings for Saiva Siddhantha treatises, Periyapuranam, Sangam verses and he has penned his rendering the modern poet Erode Tamilanban verses.*

*He resides in Kumbakonam and I always cherish his scholarship as he guided my Doctoral Dissertation on Bard of Avons plays in tamil...*

செங்கல்பட்டு மாவட்டம் கடம்பத்தூரில் 1938ஆம் ஆண்டு பிறந்தவர் கவிஞர் பி.வி. கிரி அவர்கள். இவர் மறைமலை என்ற பெயரிலும் எழுதினார். தமிழரசு இதழின் செய்தியாளராகப் பணியாற்றினார்.

இவர் குழந்தை இலக்கியப் பிரிவுகள் அனைத்திலும் தடம் பதித்துப் பல நூல்களைப் படைத்துள்ளார்.

'மலைக்குகை மர்மம்' என்பது நாவல். 'வந்தே மாதரம்' கட்டுரை நூல், 'நிலாச் சோறு' பாடல் நூல் 'அலைகடலின் அற்புதங்கள்' அறிவியல் நூல், 'வாழைப் பூ' நாடகநூல் எனப் பல பிரிவுகளில் நூல்களைப் படைத்தவர் பி.வி. கிரி அவர்கள்.

இவரின் 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே' என்ற பாடல் நூல் ஏ.வி.எம். அறக்கட்டளையின் தங்கப் பதக்கத்தைப் பெற்ற நூல். 'பொது அறிவுக் கட்டுரைகள்' என்ற நூல் தமிழக அரசின் பரிசினைப் பெற்றது. 'நிலாச் சோறு' என்ற பாடல் நூல் மத்திய அரசின் விருதினைப் பெற்றது. சர்வதேசக் குழந்தைகள் ஆண்டில் பி.வி. கிரி அவர்களுக்கு 'மழலைக் கவிஞர்' என்ற விருது வழங்கப் பெற்றது. 'அடுக்கு மொழி' என்ற இவரது பாடல் இதோ:

"தடுப்பு இருந்தால் தடுக்கலாம்
துடுப்பு இருந்தால் செலுத்தலாம்
அடுப்பு இருந்தால் சமைக்கலாம்
உடுப்பு இருந்தால் அணியலாம்!




உண்மை இருந்தால் உயரலாம்
நன்மை இருந்தால் வளரலாம்
கண்மை இருந்தால் பூசலாம்
தன்மை இருந்தால் புகழலாம்!

நாடு இருந்தால் வாழலாம்
வீடு இருந்தால் வசிக்கலாம்
மாடு இருந்தால் கறக்கலாம்
ஏடு இருந்தால் படிக்கலாம்!."

–பி.வி. கிரி

இப்பாடலில் எது இருந்தால் எது நடக்கும் என்பதை எதுகைத் தொடை, இயைபுத் தொகையுடன் சிறப்பாக எழுதியுள்ளார்.

*****

# கல்வி என்பது பெருங்கடல்



- பேராசிரியர் செ.இரா.செல்வகுமார், கனடா

40

தமிழும் கன்னடமும் ஒரே மூல மொழியைக் கொண்டது என்கிறார்கள் 'மொழியியலாளர்கள்'. சரி, அந்த மூல மொழி என்ன?

அதன் இலக்கியச் சான்றுகள் என்ன? விடையில்லை.

அந்த மூல மொழி தமிழ்-கன்னடம் என்னும் கற்பனை அல்லது கட்டியெழுப்பி வருவிக்கும் மொழி என்கிறார்கள்.

தமிழ் திரிந்து கன்னடம் ஆனது என்பது அதைவிட எவ்வளவோ வலுவான கருத்து.

மரக்கிளைப்பு ஒப்புரு தமிழிய மொழிகளுக்குப் பொருந்தாதது (பிற மொழிகளுக்கும் அப்படியே).

நாளை தமிங்கிலம் என்றொரு மொழி பிறந்தால் அன்றுதான் தமிழ் என்னும் மொழியும் தமிங்கிலம் என்னும் மொழியும் பிரிந்தது.

தமிழும் தமிங்கிலமும் ஒரே மொழியைத் தாயாகக் கொண்டது.

அம்மொழி 'தமிழ்-தமிங்கிலம்' என்று சொல்லப்படும் என்று உரைப்பார்கள் மொழியியலாளர்கள். இது செல்லாது.

தமிழில் ஆங்கிலம் கலந்து சொற்களிலும் இலக்கணங்களிலும் சிறுசிறு மாற்றங்கள் நிகழ்ந்து தமிழிலிருந்து தமிங்கிலம் தனி மொழியாயிற்று என்பது உண்மை.

மாநிலங்கள் இணைந்து இந்தியா என்றால் சரி.

அவ்வாறே மொழிகள் இணைந்து அதற்கொரு பெயர் வேண்டுமே அதுதான் திராவிட மொழி என்ற அடைப்புக்குறி என்பதே எனது கருத்து

திராவிட என்பதும் அதைத்தானே சொல்கிறது.

தமிழ்தான் மூலம் பழமை என்பதில் எவருக்கும் மறுப்பு கிடையாது.

ஆனால் தமிழிலிருந்து தான் பிறந்தது என்பதில்தான் சிக்கல்.

தமிழிய என்பதற்கான மாற்று திராவிட என்ற ஒன்றுள்ளதால்தான் தமிழிய என்பதாக ஏன் ஏற்கவேண்டுமென்ற நிலை எழுகிறது.

தமிழியக் குடும்பம் (மொழிக்குடும்பம்) என்பது சரியே.

ஆங்கிலத்தில் இது *Tamilic* என்று குறிக்கலாம்.

*Italic, Germanic* என்பன போன்ற கலைச்சொல்.

ஆனால் இன்று வழக்கில் உள்ளது திராவிட மொழிக்குடும்பம்.

*Dravidian language family.*

இப்பொழுது இருக்கும் சொல்லாட்சி பல தமிழர்களுக்கு ஏற்பில்லை.

எப்படி மாற்றுவது, மாற்ற முடியுமா (மொழியியல் ஆய்வுலகில்) என்பது கேள்விக்குறியாக இருக்கலாம்.

ஆனால் மாற்றவேண்டும் என்பது பலரின் விருப்பம்.

கால்டுவெல்லின் பிழை தொடர்ந்துதான் ஆகவேண்டும் என்னும் கட்டாயமில்லை.

தமிழ், கன்னடம், தெலுங்கு, துளு, பிராகுயி, கூயி, கோண்டி போன்று 28-80 மொழிகள் வரை எல்லாமும் தமிழிய மொழிக்குடும்ப மொழிகள்தாம்.

நமது தமிழுக்கும் மூலமென என்றில்லாமல் கன்னடம் தெலுங்கு துளு ... பதினெண் செப்புமொழிகள் வாராதே!!?

அந்தப் பதினேன் மொழிகளுக்குத்

தாயாகத் தமிழும் திகழ்கிறதுதானே!

அரசியல் தாண்டி மொழியியல் கருத்தியலிலேயே அடிப்படைச் செல்லாமைகள் உள்ளன.

இவற்றைப் பதிவு செய்து ஆய்வுலகில் ஏற்கச் செய்ய வேண்டும்.

ஓர் இலையைப் பயன்படுத்தி ஒரு நோய் தீரும் என்றாலும் ஆய்வுலகத்தில் நிறுவிய பின்னரே, நோய் தீர்ந்தது என்பதை ஏற்போம் என்பது போன்ற நிலைமை.

ஆய்வுலகில் நிறுவத்தான் வேண்டும்.

பேரா. எமனோ DED அகராதிச் சொற்களை அவர் எங்கும் நிறுவவில்லை.

அது '*etymological dictionary*' ஏ இல்லை என்பதை உண்மை அறிந்தவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

மொழிக்குரிய 'பெருமை' என்பதெல்லாம் பொருட்டன்று.

உண்மை, சரியான அலசல் (சாய்வில்லா) ஆகியவை முக்கியம்.

தமிழிய மொழிக்குடும்பம் என்றால் தமிழ் அதிலுள்ள எல்லா மொழிகளுக்கும் தாய் என்று பொருளில்லை.

*For Germanic language German is not mother.*

*For Italic languages Italian is not the mother.*

*Dravidian* என்பதும் தமிழ் என்னும் பொருளுடைய சமற்கிருதச் சொல்லே!

இந்து-திராவிட என்று ஏதும் கிடையாது. திராவிட மட்டும்தான் உண்டு.

அந்தத் திராவிட தமிழிய (*Tamilic*) என்றாக வேண்டும்.

ஆனால் தமிழ் திரிந்து மலையாளம் ஆயிற்று கன்னடம் ஆயிற்று, தெலுங்கு ஆயுற்று என்று கூறுவது வேறு. அப்படிச்சொல்லும்பொழுது தமிழ் அம்மொழிகளுக்குத் தாய் என்பதாகப் பொருள்படும்.

பிறமொழியாரிடையே எதிர்ப்புணர்வு, கசப்புணர்வு தோன்றும்.

ஆனால் சமற்கிருத உறவை, சமற்கிருத எழுத்து வரிசையை எதிர்க்கிறார்கள் இல்லை.

இங்கே பல்வேறு வகையான அரசியல் செயற்படுகின்றது.

உண்மைகளைச் சாய்வின்றி எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

**********

# BRIEF LIFE SKETCHES OF THE EUROPEAN SCHOLARS

- Mahavidvan **Meenakshi Sundaram**

*In 1740 Beschi went to Trichy when a great Maratta invasion took place. In 1742, Beschi's friend Chanda Sahib was overthrown and defeated. The same year Beschi retired to Manapad and a year later he visited Vembar twice.*

*He was appointed visitor of the Seminary of Ampalakat in Travancore in 1746. A year later in 1747 on the 4th February, he died at the age of 66.*

*Beschi will be remembered chiefly for his Tempavani and his Dictionaries. The Indian mentality is and was attuned to poetry and good verses delight the ear while helping memory..*

*The Tempavani is the noblest epic poem in honour of St. Joseph. This great poem was completed before 1729 and was the result of several years of hard toil.*

*The other great work but less known is the poem on the life of St. Quiteria of Portugal.*

*The grammar of Common Tamil of Beschi is the first work of its kind and was compiled on European lines. This was completed round about 1738, the year it was published, He also wrote Tamil prose.*

******



# வள்ளுவம்..!

- மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார்

124

## 10. திருக்குறள் நடை

### தமிழ் நடை மாந்தீர்!

நல் வணக்கம். திருக்குறளின் உள்ளியல் பற்றி இரண்டும் பொருளியல் பற்றி மூன்றும் அறிவியல் பற்றி இரண்டும் குடியியல் பற்றி ஒன்றும் அரசியல் பற்றி ஒன்றும் ஆக இதுகாறும் ஒன்பான் வள்ளுவச் சொற்பொழிவுகள் ஆற்றினேன். அவற்றிடை எடுத்தாண்ட குறள்களுள் ஒரு சிலவற்றிற்கு நடை நுட்பமும் அவ்வப்போது தெரிவித்தேன். ஆறாவது அறிவுப் பிறப்புத் தலைப்பில் குறித்தாங்கு, 'திருக்குறள் நடை' என்னும் பொருள் களனாக இன்று பொழிவு செய்வேன்.

திருக்குறள் வாழ்வியல் காட்டும் இலக்கண நூலாயினும் காவியம்போல் சுவை பொதுளியது; இலக்கிய நடை பயின்றது; 'நவில்தொறும் நூல்நயம் போலும்' (783) என்றபடி, உவமை நூலாகத் தகுவது. 'எண் பொருளவாகச் செலச் சொல்' (424). 'திறன் அறிந்து சொல்லுக' (644), 'வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து சொல்லுக' (645), 'நிரந்து இனிது சொல்லுக' (648), 'மாசற்ற சில சொல்' (649), 'கற்றது உணர, விரித்துரை' (650) என்ற நடையியலெல்லாம் தனக்கே அமையப்பெற்றது; நம் மொழித்தாயின் தூய்மை, வன்மை, செம்மை, வளமை, தொன்மை, புதுமை, இனிமை முதலாய உண்மைகட்கெல்லாம் சான்றாவது.

அறிவியல் நூல்கள் நிழற்படம் போல்வன; கருத்துக்காட்டும் நடையொன்றே உடையன; ஆதலின், அவற்றைப் பொருள் குன்றாது ஒரு மொழியிலிருந்து பிறமொழிக்கண் பெயர்த்துக்கொள்ள முடியும். இலக்கியத்தின் அடிப்படை வேறு. கருத்துப்போல் செம்பாக மதிப்பு நடைவண்ணத்துக்கம் உண்டு. கருத்தால் அறிவும் நடையால் சுவையும் பெறுகின்றோம். நடையழகு இல்லா இலக்கியம் நிறவண்ணம் இல்லாச் சோலையையும் மெய்ப்பாடில்லா நடிகனையும் வெள்ளாடை உடுத்திய பெண்ணையும் ஒக்கும். எம் மொழிக்கண் ஓரிலக்கியம் தோன்றிற்றோ, அதனை அம்மொழிக்கண் கற்பதுவே முறையும் நிறையும் ஆகும். மூல இலக்கியம் படிப்பது மாம்பழத்தை நாம் வாய்வைத்துச் சுவைப்பதை நிகர்க்கும். மொழிபெயர்ப்பு இலக்கியம் பார்ப்பது மாம்பழ வடிவாகப் பண்ணிய இனிப்புப் பண்டத்தைத் தின்பது ஒக்கும். மூல இலக்கியம் பிறமொழி மாறும்போது, உடல்மாறி நடைமாறித் தன் கன்னிமையை அழந்துவிடுகின்றது. இவ்விளக்கம் எம்மொழி இலக்கியத்திற்கும் பொது. நிற்க.

வளரும்...

159



# தமிழன்னை நான்மணிமாலை

- செம்மொழிக்கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு
சங்க இலக்கிய ஆய்வறிஞர்

**"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு."** – (குறள் 355)

"எப்பொருள் எந்தத் தன்மையானது ஆனாலும் அப்பொருளில் உண்மையான இயல்பைக் காண்பதே அறிவு ஆகும்" என்று திருவள்ளுவரே தெளிவுறச் சொன்னார். ஆயினும் ஒன்றன் உட்பொருள் அறிந்து மெய்ப்பொருள் காணாது எதிர்மொழி உரைப்பர் ஒன்னார். காணும் எதனையும் ஆழ்ந்து நோக்கிப் பொருளறிவதே வாழ்க்கைக்குப் பாதுகாப்பு. மெய்ப்பொருள் அரியக் கற்றவரின் உள்ளமே பலருக்கும் பலன் தரும் பழத்தோப்பு.

செறிந்த பொருளை அறியாமல் இருப்பதும் பிழையான பொருளில் ஆழ்ந்து கிடப்பதும் நன்மை தருவதில்லை. எதனிலும் முயன்று உட்சென்று பன்னோக்கில் ஆய்ந்து தெளிந்தால் குழப்பங்கள் வருவதில்லை. மதிமயக்கம் நீடித்தால் மன இருளும் நீடிக்கும். அதனைக் களையாவிடில் அகமும் மங்கிப் பின்னொரு நாளில் அறியாமை எனும் நோயே பீடிக்கும்.

கண்ணால் காண்பதையோ காதால் கேட்பதையோ ஆராய்ந்து பார்ப்பதே அறிவுடையார்க்குத் தலையாய கடமை. அறிவில் தெளிவடையாமல் விரைவாகச் செயல்படுவதால் அன்றாடம் கூடும் மடமை. அதனையும் வள்ளுவர் வழி எனக்குத் தெளிவாக எடுத்துரைத்தாள் அன்னை. அன்னைக்கு என் அன்புமிகு நான்மணிமாலை!

## அகவல்

மகிழ்வுடை நல்ல மங்கல வாழ்வினில்
முகிழ்க்கும் புன்னகை முழுதாய்ப் பெறவே
கற்பீர் கற்றல் கலைகள் முதலில்
கற்பனை வளர்ப்பீர் கமழும் வாழ்வே
தொல்காப் பியரே துலங்க உரைத்த
நல்மெய்ப் பாட்டியல் நாடிக் கற்றேன்
மெய்யாய் மண்ணில் மென்மை கொண்டவை
பொய்யிலா நகையும் பூப்போல் மனமும்
எள்ளல் வேண்டாம் எவரையும் நல்ல
உள்ளம் தானே உயர்த்தி வைக்கும்
செய்யும் எந்தச் செயலிலும் நேர்மை
ஐயம் இன்றி அரும்பெயர் நல்கும்
காய்தல் உவத்தல் கண்ணில் இலாமல்
ஆய்தல் செய்தே அறிவீர் உண்மை
நல்ல நகைப்பை நாளும் தருவோர்
வெல்ல முடியும் வேண்டிய வற்றை
சொல்லால் இனிமை சுவைநிறைத் துரைக்கின்
எல்லா உறவும் இனிதே நிலைக்கும்
என்றே அன்னை இயம்பினள்
அன்றே தெளிவை அடைந்தேன் நானே.

## வெண்பா - 130

நானே முனைந்து நலன்களைக் கண்டிடத்
தானே வளர்த்தாள் தகுதியாய் - ஆனேன்
கவிஞனாய் ஆற்றலும் பெற்றேன் புவியில்
கவினுற நின்றேன் கனிந்து

## கலித்துறை

கனிந்த உளமும் கலையெழில் தோற்றமும்
காட்டுபவள்
குனித்த புருவமும் கொவ்வை இதழ்களும்
கொண்டவளாம்
இனிக்கும் மொழியும் இருவிழி தன்னில்
இரக்கமுமே
எனக்கும் வழங்கும் இனியவள் அன்னைக்
கிணையிலையே.

## விருத்தம்

இணையே இலாத இனியவள் அன்னை
என்றுமே எந்தன் இறைவியவள்
பணைத்தோள் எழிலும் பனிமொழி வீச்சும்
பார்த்ததும் ஈர்க்கும் பளிங்கொளியாள்
துணையும் இலாது துவள்கிற போதில்
துரும்பென ஆழித் தொடரலையில்
புணைபோல் மிதந்தேன் புகழ்மகள் மீட்டுப்
புதுமைகள் தந்தாள் புலர்ந்திடவே.

# பரிபாடல் - நூற் சிறப்பும் பாநயமும் !



- புலவர் தி.வே.விஜயலட்சுமி

136

**இசைப்பாட்டு:**

பரிபாடல் என்பது ஒருவகை இசைப் பாட்டு ஆதலின் ஒவ்வொரு பாட்டுக்கும் இராகம் உண்டு. பாடலைப் பாடிய புலவர் வேறு, அதற்கு இசையமைத்தவர் வேறு. ஒவ்வொரு பாட்டின் பின்னும் இவற்றைப் பற்றிய குறிப்புகள் உள்ளன, இரண்டாவது பாட்டின் கீழ் உள்ள குறிப்புகள் வருமாறு:

"கடவுள் வாழ்த்து நன்னாகனார் இசை
கீரந்தையார் பாட்டு பண்ணுப்பாலை யாழ்"

இந்நூல் 25 அடிகள் முதலாக 400 அடி வரையில் வரும் என்பது இலக்கணம்.

**பரிபாடலின் முக்கிய கருத்துகள்:**


இப்போது கிடைக்கும் பரிபாடலில் திருமாலைப் பற்றியும் முருகனைப் பற்றியும் பல பாடல்கள் இருப்பதால் சங்க காலத்துத் தமிழ் மக்களின் கடவுள் உணர்வு பற்றிய பல கருத்துகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது. வையை அந்தக் காலத்தில் நீரோட்டம் மிகுதியும் உடையதாக இருந்தது. நீர் விளையாட்டைப் பற்றிய காட்சிகளையும் மதுரை மாநகர் மக்களின் நீராட்டு விழா ஆர்வத்தையும் இந்த நூலில் காணலாம். அகப்பொருள் துறை அமைந்த பாடல்களும் உள்ளன.

திருமாலிருஞ்சோலை மலை, திருப்பரங்குன்றம், இருந்தையூர் என்ற தலங்களைப் பற்றிய செய்திகள், சில பாடல்களில் வருகின்றன. அந்தக் காலத்து மக்கள் அத்தலங்களில் உள்ள தெய்வங்களை வழிபடும் வகைகளையும் தெரிந்து கொள்ள இந்தப் பாடல்கள் உதவுகின்றன. திருமாலைப் பற்றிய பல புராண வரலாறுகளும் முருகனைப் பற்றிய பல கதைகளும் அந்தக் காலத்தில் வழங்கி வந்தன என்பவற்றை இந்நூல் மூலம் அறிகிறோம்.

...வளரும்




# முதல் தரமான சாப்பாட்டுக் கடை



முதல்தரமான
சாப்பாட்டுக்கடை.

S. S. அவர்கள்பெயரால் லைசன்ஸ் பெற்று பிணங்கு குயின்ஸ்ட்ரீட் என்னும் மாரியம்மன் கோயில்வீதி 40-நெ. கிரகத்தில் ஸ்தாபிக்கப்பட் டிருக்கும் மா. நா. நா. சுப்பிரமணியப்பிள்ளையின் பிரசித்திபெற்ற சாப்பாட்டுக்கடையில் சுத்தமான போஜனமும் ருசிகரமானபதார்த்தங்களும், வசதியான இடமும்தரப்படும். இந்தியா, அக்கரை ஊர்களிலிருந்து வருபவர்களும், அங்குபோகிறவர்களும் இந்த சாப்பாட்டுக் கடையைத்தேடி வருகிறார்கள். ஒருமுறைஇங்கு போஜனஞ் செய்தவர் மறுமுறை வேறுஇடம் போகமாட்டார்.

திருப்பத்தூருக்கு அடுத்த
ஆத்திரம்பட்டி,
மா. நா. நா. சுப்பிரமணியப்பிள்ளை,
கணக்கு.

1912ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் நாள் வெளிவந்த பினாங்கு ஞானாசாரியன் பத்திரிகையில் ஒரு விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. அது ஒரு உணவகம் பற்றிய விளம்பரம்.

இந்த விளம்பரம் சொல்லும் செய்தியைக் காண்போம். எஸ்.எஸ் என்ற ஒருவரது பெயரில் வணிக உரிமம் பெற்று பினாங்கிலுள்ள குவின்ஸ்ட்ரீட் சாலையில் மாரியம்மன் கோயில் இருக்கும் சாலையில் ஒரு உணவகம் திறக்கப்பட்டுள்ளது. மா.நா.நா சுப்பிரமணியப்பிள்ளை என்பவருடைய இந்தப் புகழ்பெற்ற சாப்பாட்டுக் கடையில் தூய்மையான ருசியான உணவு விற்கப்படுகிறது. அங்கேயே தங்கிக் கொள்ளவும் அறைகள் உள்ளன. இந்தியாவிலிருந்து, அக்கரை ஊர்களிலிருந்து வருபவர்களும் பினாங்கிலிருந்து இந்தியாவிற்குச் செல்பவர்களும் இந்தச் சாப்பாட்டுக் கடையைத் தேடி வருகிறார்கள். ஒருமுறை இங்குச் சாப்பிட்டவர்கள் பின்னர் வேறெங்கும் செல்ல மாட்டார்கள். இங்குதான் உணவு உண்பார்கள்.

இந்த விளம்பரத்தை வழங்கியவர் "திருப்பத்தூருக்கு அடுத்த ஆத்திரம்பட்டி எனும் ஊரைச் சார்ந்த மா.நா.நா சுப்பிரமணியப்பிள்ளை என்பவரின் கணக்கு" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பினாங்கில் குவின்ஸ்ட்ரீட் எனப்படும் சாலை பிரசித்தி பெற்றது. இங்கு இன்று ஏராளமான தமிழர்கள் வணிகம் செய்கின்றார்கள். பினாங்கின் தமிழ் வணிகர்கள்

மட்டுமே கோலோச்சும் பகுதி இது. கடைவீதி என்றும் சொல்லலாம்.




இன்று ‘லிட்டல் இந்தியா’ என அழைக்கப்படும் பகுதியில் இச்சாலையும் அடங்கும். இங்குதான் பிரமாண்டமான மாரியம்மன் கோயில் உள்ளது. இன்றும் கூட தைப்பூசத் திருவிழா இக்கோயிலில் தொடங்கி பின்னர் தண்ணீர்மலை முருகன் கோயில் வரை செல்வது வழக்கம்.

விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ‘அக்கரை’ என்ற சொல் மலேசிய தமிழர்கள் அடிக்கடி பயன்படுத்தும் சொல் எனலாம். தமிழ்நாட்டைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல் என்றும் பினாங்கு தீவைக் கடந்த நிலப்பகுதி என்றும் இரு வேறு பொருளில் இது பயன்பாட்டில் உள்ளது.

இன்று இப்பகுதியில் ஏராளமான தமிழர்கள் மற்றும் தமிழ் முஸ்லிம்களின் உணவகங்கள் செயல்படுகின்றன. ‘ஊர்க்காரரர்கள்’ தெரு என்றும் இப்பகுதி இன்று உள்ளூர் தமிழ் மக்களால் அழைக்கப்படுகிறது. ‘ஊர்’ என்ற சொல் தமிழ்நாட்டைக் குறிப்பதுதான். ‘ஊர்’ என்றாலே மலேசியத் தமிழர்களுக்கு அது தாய் தமிழ்நாடுதான். இது மிக இயல்பாக மக்களின் பேச்சுப் பயன்பாட்டில் இடம்பெற்றுவிட்டது.

*[குறிப்பு: இப்பத்திரிகைச் செய்தி இக்கட்டுரை ஆசிரியரால் பிரித்தானிய நூலகத்தின் ‘இந்தியா அலுவலகம்’ பகுதியில் உள்ள ஆவணப் பாதுகாப்புப் பகுதியிலிருந்து 11.03.2025 அன்று மின்னாக்கம் செய்யப்பட்டது]*

******




மலையைக் குடைந்து பேருந்து செல்ல பார்த்திருக்கிறேன்... இன்னும் மலையைக் குடைந்து தொடர்வண்டி செல்வதைப் பார்த்திருக்கிறேன்... இப்போது மலையைக் குடைந்து செல்லும் நீரின் அழகை உலகத்தமிழ் மின்னிதழில் பார்த்து மகிழ்கிறேன்.

11.06.2025- அன்று வெளியான 288ஆவது உலகத்தமிழ் மின்னிதழில் மலர்ந்து இருக்கிறது இந்த அபூர்வமான முகப்போவியம்.

இந்த இதழ் மொத்தம் 35 பக்கங்கள் உடையதாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதழின் கணினி வடிவமைப்புக் கண்ணைக் கவரும் விதமாக அமைந்திருக்கிறது.

முதல் பகுதியான கொள்கை விளக்கக் குறிப்புப் பகுதியில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பாக ஆண்டுதோறும் கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு மாணவர்களுக்கு மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் வழங்கப்பட்டு வரும் ரொக்கப் பரிசுகள் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்து கொள்ள இந்தப் பகுதி உதவியாக இருக்கிறது.

நூலேணி பகுதியில் உலகத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்... குறிப்பாக முனைவர் பசும்பொன் தொகுத்த கட்டுரை நூல்கள் பற்றிய பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது.

அதுபோல உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் நூல் பட்டியல்களும் வழக்கம் போல வெளியாகி இருக்கிறது.

அதனைத் தொடர்ந்து தமிழெழுச்சி என்கின்ற பகுதியில் மகாகவி பாரதி மற்றும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் கவிதை வரிகள் இதழுக்கு அணி சேர்க்கின்றன.

ஆசிரியம் பகுதியில் தமிழகத்தோடு குமரி மாவட்டத்தை இணைக்கின்ற போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திய...

நடத்தி 'குமரித் தந்தை' என மக்களால் இன்றளவும் போற்றப்படுகின்ற மார்ஷல் நேசமணி ஐயா பற்றிய குறிப்புகள் இடம் பெற்றிருக்கின்றன.

இந்திய நாடு சுதந்திரம் அடைந்தபோதும்... அடைந்த பிறகும் கன்னியாகுமரி மாவட்டம் கேரளா மாநிலத்தோடு இணைந்திருந்தது. தமிழ் பேசும் மக்கள் அதிகமாக இருந்த இந்தப் பகுதி மீண்டும் தாய்மொழி பேசும் தமிழ்நாட்டோடு இணைக்கப்பட வேண்டும் என மக்கள் விரும்பினார்கள்... போராடினார்கள். அந்தப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்றார் மார்ஷல் நேசமணி அவர்கள்.

அவர்களுக்கு இது மட்டும் சிறப்பைத் தந்து விடுவதில்லை... சுதந்திரப் போராட்ட வீரர், தியாக சீலர், மக்கள் நாயகர் என்ற அடைமொழிகள் எல்லாம் அவருக்குப் பெரும் சிறப்பைச் சேர்த்து இருக்கின்றன. ஐயா நேசமணி அவர்களைத் தமிழ்நாடு அரசும் ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது. அவரது புகழ் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து எவருக்கும் கிடையாது.

அச்சுத் துறையின் சிறப்புக் குறித்து அவ்வப்போது பகுதியில் முனைவர் ந.அருள் பதிவு செய்து இருக்கிறார்.

இந்தத் துறையைப் பற்றிச் சொல்கிறபோது, கல்வித்துறை உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறை செயல்பாடுகளுக்கும் சீரிய சாதனைகளுக்கும் மக்கள் தொடர்புக்கும் மகத்தான பங்காற்றி வருவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்திய தேர்தல் ஆணையம் நடத்தும் தேர்தல் பணிகளிலும் இத் துறையின் பணிகள் மகத்தானது என்பதை அத்துறையில் பணியாற்றியவன் என்ற முறையில் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

வழக்கம் போல இடம்பெறும் தேன் துளி பகுதியில் முதல் துளியில் 'தொழிலாளி' என்ற வார்த்தையில் ல ள ழ என மூன்று எழுத்துகளும் இணைந்து வருவது சுட்டிக்கட்டப்பட்டு இருக்கிறது.

தேன் துளி இரண்டில் கடந்த பத்து ஆண்டுகளில் அறிவியல் தொழில்நுட்பத்தில் இந்தியா மேம்பட்டுச் சாதனை படைத்திருந்தாலும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் இந்தியா மாறாத மற்றும் நிலையான முதலீட்டைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக, கட்டுரைகளைப் பொறுத்தளவில் உரை வேந்தர் ஔவை துரைசாமியின் சேர மன்னர் வரலாறு 226ஆவது வாரமாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் வள்ளுவ அரசு என்கின்ற கட்டுரையும் நீண்ட காலமாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

பல சிறப்பான கருத்துகளை இந்தக் கட்டுரைகள் பிரதிபலித்து வருகிறது.

ஐயா ஔவை நடராசர் அவர்களின் ஆழங்கண்ட ஆளுமையர் பகுதியில் காலம் மறக்காத இ.சு. பாலசுந்தரம் அவர்களைப் பற்றிய சில குறிப்புகளைப் பார்க்கிறோம்.

மேலும் இந்தப் பகுதியில் டாக்டர் தாரா அம்மையார் பற்றிய பெருமைகளையும் நான் பார்க்கிறேன்.

இரு மொழிகளில் வெளியாகி வரும் நற்றிணை -ஆங்கிலம் சிறப்பாக இருக்கிறது.

குழந்தைக் கவிஞர் பரம்பரை என்கின்ற அந்தப் பட்டியலில் முனைவர் தேவி நாச்சியப்பன் அவர்கள் இந்த வாரம் நமக்கு அறிமுகம் செய்திருக்கும் குழந்தை எழுத்தாளர் பெயர் மு. நடராசன் என்பதாகும்.

அடிப்படையில் ஆசிரியரான இவர் நிறைய படைப்புகளை எழுதியிருக்கிறார். இவரது படைப்புகள் எல்லாம் கோகுலம், சிறுவர் மணி, தங்க மலர், நல்வழி போன்ற பிரசித்திபெற்ற சிறுவர் நூல்களில் வெளியாகி இருக்கிறது என்பது இவருக்கான கூடுதல் சிறப்பாகும்.

நல்லாசிரியர் விருதும் பெற்றிருக்கிறார் இவர். இவர் எழுதிய பாடல் ஒன்று இந்த இதழில் இடம் பெற்று இருக்கிறது. அதில் வரும் வார்த்தை... "இயற்கை 'ஏசி'யை இழந்தோம்"... என அவர் குறிப்பிடும் அந்த வரி என்னைக் கவர்ந்த வரியாகப் பார்க்கிறேன். மரங்களை வெட்டிச் சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவித்து வருவதால் நாம் இயற்கையான 'ஏசி'யை இழந்தோம் என நடராசன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

குழந்தைகள் மத்தியில் சூழல் எவ்வளவு முக்கியமானது என்பதைச் சொல்லும் இவரது சமூக அக்கறை போற்றுதலுக்கு உரியது.

கடந்த வாரமே இயற்பியல் என்பதுதான் பிசிக்ஸ் என்பதற்குச் சரியான சொல் எனப் பேராசிரியர் செல்வகுமார் அவர்கள் கல்வி என்பது பெருங்கடல் என்கின்ற கட்டுரையில் சொல்லியிருந்தார்கள்.

இந்த வாரமும் அதனைச் சார்ந்த சில கருத்துகளையும் தந்திருக்கிறார்கள். புலவர் தி.வே.விஜயலட்சுமி அவர்களின் பரிபாடல் - நூற்சிறப்பும் பாநயமும் அருமை...

மு.வரதராசனார் எழுதிய குறள் விளக்க உரையோடு தேமொழி எழுதும் குறள் தரும் சொற்சுவையும் பொருட்சுவையும் சிறப்பைத் தருகிறது.

அறிவோம் -10 என்கின்ற பகுதியில் இந்த வாரம் தொல்லியல் துறை இயக்குநர்கள் மற்றும் ஆணையர்களின் பட்டியலைப் பார்க்கிறோம்.

பொருள்களின் இணையப் பயன்பாடுகள் என்ற தலைப்பில் முனைவர் சண்முகம், பனை ஓலையில் எழுதி? காகிதத்தில் அச்சிடப்பட்டு... இன்று கணினிக்கு வந்து நிற்கும் மொழி வளர்ச்சி குறித்துச் சிறப்பாக எழுதி இருக்கிறார்.

எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே... என்கின்ற பகுதியில் கடந்த வாரத்தைப் போல இந்த வாரமும் கருமலைத்தமிழாழன் கவிதை இடம் பெற்றிருக்கிறது.

செய்தி வெளியீடு பகுதியில் ஒரு முக்கியமான அறிவிப்பு வெளியாகி இருக்கிறது இந்த வாரம்...

2025ஆம் ஆண்டுக்கான தமிழ் முதுகலைப் பாடம் (தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன்) மாணவர் சேர்க்கை அறிவிப்பு தமிழ்நாடு அரசு வழங்கும் கல்வித் தொகையுடன் நடத்தப்படும் முதுகலைப் பட்டப் படிப்பு பற்றிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அறிவிப்பு முக்கியமான ஒன்றாக இந்த வாரம் வெளியாகி இருக்கிறது.

அடுத்த பகுதியான சட்டவியல் அகர முதலில் வழக்கம் போல பயனுள்ள பகுதியாக இருக்கிறது.

புகழ் வணக்கம் பகுதியில் இந்த வாரம் முனைவர் பசும்பொன், பேராசிரியர் மு.முத்துவேல், அன்புச் சோழன் உள்ளிட்டோரின் இரங்கல் செய்திகள் இடம் பெற்றிருக்கின்றன.

இத்துடன் 288ஆவது இதழ் நிறைவு பெறுகிறது... அடுத்து வருவது 289ஆவது இதழ். காத்திருப்போம்...

நன்றி.



கவிஞர் பேரா, திருநெல்வேலி.




*11.06.2025* உலகத்தமிழ் *288* கொள்கை விளக்கக் குறிப்பு - மாவட்ட, மாநில அளவிலான பள்ளி, கல்லூரி மாணவர்கள் போட்டிக்காக *2024 - 25* ஆண்டுக்கு ரூ*66,88,000* ஒதுக்கீடு விவரம்.

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை, வெளியிட்ட நூல்கள் சிறப்பு.

ஆசிரியம் - குமரித்தந்தை மார்ஷல் நேசமணி, கல்லூரிக் காலத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்திலும் பின்னர் கன்னியாகுமரி மாவட்டத்தைத் தமிழ்நாட்டுடன் இணைக்கவும் போராடினார் எனும் தகவல்கள்.

அவ்வப்போது - தமிழ்நாடு அரசின் எண்ணங்களை ஏந்தி 'எல்லோருக்கும் எல்லாம்' என்னும் சித்தாந்தம் எங்கணும் சென்றடைய ஏறு நடையிட்டு வரும் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் பணிகள் சிறப்பு.

தேன் துளி *1* - தமிழில் ல,ள,ழ மூன்றும் இணைந்த சொல் தொழிலாளி. *1992*ஆம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஔவை நடராசன் ஐயா அவர்கள் தமிழ் உச்சரிப்பில் தொழிலாளர்களை இணைத்துப் பேசிய செய்தி.

தேன் துளி *2* அறிவியல் ஆராய்ச்சிக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சீனா *2.43%* அமெரிக்கா *3.46%* தென்கொரியா *4.93%* செலவிடுகின்றனர். ஆனால் இந்தியா *0.65%* மட்டுமே செலவிடுகிறது எனும் செய்தி.

ஆழங்கண்ட ஆளுமையர் - பச்சையப்பன் கல்லூரியில் உடன் பயின்ற இ.க.பாலசுந்தரம் அவர்களின் அருமையை விளக்குகிறார்.

கல்வி என்பது பெருங்கடல் - பேராசிரியர் திரு செ.இரா.செல்வகுமார் அவர்கள் *Physics* என்பதற்கு இயற்பியல் முற்றிலும் சரியான சொல் எனத் தெரிவித்துள்ளார்.

மூதறிஞர் வ.சுப.மா. வழங்கும் வள்ளுவம் - குறள் *553* நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன்... என்ற குறள் வழி அரசு வினையாளர்கள் சிறிதும் தாமதிக்காமல் மக்கள் காரியங்களை முடித்துக் கொடுத்தால், நாடு விடுதலை பெற்றது என மக்கள் கண்டு கொள்வர் என்கிறார்.

பரிபாடல் நூற்சிறப்பும் பாநயமும் கட்டுரை புலவர் திருமதி தி.வே. விஜயலட்சுமி வழங்கியுள்ளார்.

முனைவர் திருமதி க.சுபாஷிணி - பட்டயத்தை எடுத்தவன் பட்டயத்தால் சாவான் கட்டுரை, *1912*ஆம் ஆண்டில் பினாங்கு ஞானாசிரியன் பத்திரிகையில் உள்ள பல செய்திகள், இந்நாளில் பத்திரிகைகளில் வெளிவரும் பரபரப்புச்

செய்திகளை ஒத்துள்ளதாகக் கூறுகிறார்.

பல வாரங்களுக்குப் பிறகு திருமதி தேமொழி அவர்களின் குறள் தரும் சொற்சுவையும் பொருட்சுவையும் வெளியாகியுள்ளது.

முனைவர் திரு க.சண்முகம் அவர்கள் கணினியில் தமிழ் எழுத்துருக்கள் உருவாக்கப்பட்டது குறித்து விவரிக்கிறார்.

2025ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு உதவித் தொகையுடன் நடத்தப்படும் தமிழ் முதுகலைப் படிப்பு பற்றிய செய்தி அறிவிப்பு பயனுடையது. சட்டவியல் அகரமுதலி, புகழ் வணக்கம் உள்ளிட்ட 35 பக்கங்களும் அருமை. மகிழ்ச்சி.



முனைவர் தேவி நாச்சியப்பன்

33



- தேமொழி
அமெரிக்கா

# குறள் தரும் சொற்சுவையும் பொருட்சுவையும்

**நல்லொழுக்கம் எது என்றால்**

**நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**கொல்லாமை சூழும் நெறி. [324]**

நல்ல வழி என்று அறநூல்களால் சொல்லப்படுவது எது என்றால், எந்த உயிரையும் கொல்லாத அறத்தைப் போற்றும் நெறியாகும்.

இதே முறையில், மற்ற நல்லொழுக்கங்களான கள்ளாமை, தீங்கு செய்யாமை ஆகியவற்றையும் எது என்ற கேள்வி எழுப்பிப் பதில் கூறும் முறையில் விளக்குகிறார்.

**அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை**
**வேண்டும் பிறன்கைப் பொருள். [178]**

ஒருவனுடைய செல்வத்திற்குக் குறைவு நேராதிருக்க வழி எது என்றால், அவன் பிறனுடையகைப் பொருளை விரும்பாதிருத்தலாகும்.

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல். [291]**

வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீங்கு இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

உயிரைக் கொல்லுதல், ஒருவர் பொருளைக் களவாடுதல், தீங்கு செய்தல் இவற்றைத் தவிர்க்கும் நோக்கில் எது என்றால் என்று கேள்வி எழுப்பி விளக்கும் வகையில் இக்குறள்கள் அமைந்திருக்கின்றன.

சிறந்த நட்பு எது என்றால்; நட்பிற்கு இலக்கணமாக அமைவது; மாறுபாடு இல்லாத நெஞ்சத்துடன் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து அரவணைத்துச் செல்லும் நிலையும்; நெடுநாள் நட்பின் காரணமாக ஒருவர் உரிமையுடன் நமக்கு ஏற்புடையது அல்லாத ஒரு செயலைச் செய்துவிட்டாலும் நட்பு கருதி அதைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடுவதுமாகும்.

**நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை. [789]**

நட்புக்கு சிறந்த நிலை எது என்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், முடியும் போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும்.

**பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்**
**கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. [801]**

பழைமை என்று சொல்லப்படுவது எது என்று வினாவினால் அது பழகியவர் உரிமைப் பற்றிச் செய்யும் செயலைக் கீழ்ப்படுத்தாமல் ஏற்கும் நட்பாகும்.

# தொல்லியல் துறை இயக்குநர்கள் / ஆணையர்கள் பட்டியல்

| வ.எண் | பெயர் | முதல் | வரை |
|---|---|---|---|
| 13. | திருமிகு சி.பி.சிங் இ.ஆ.ப., முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் | 21.05.2011 | 31.05.2012 |
| 14. | முனைவர் சீ.வசந்தி எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி., ஆணையர் பொறுப்பு | 01.06.2012 | 01.06.2014 |
| 15. | முனைவர் தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., ஆணையர் | 02.06.2014 | 04.07.2016 |
| 16. | முனைவர் டி.ஜகந்நாதன் இ.ஆ.ப., ஆணையர் (பொ) | 21.07.2016 | 05.04.2017 |
| 17. | திருமிகு அசோக்ரஞ்சன் மஹாந்த்தி இ.ஆ.ப., ஆணையர் | 06.04.2017 | |
| 18. | முனைவர் டி.ஜகந்நாதன் இ.ஆ.ப., ஆணையர் (மு.கூ.பொ) | 14.07.2017 | 27.05.2018 |
| 19. | திருமிகு கு.நாகராஜன் இ.ஆ.ப., ஆணையர் | 28.05.2018 | 31.07.2018 |
| 20. | டாக்டர் பிங்கி ஜோவல் இ.ஆ.ப., ஆணையர் (மு,கூ.பொ) | 01.08.2018 | 26.08.2018 |
| 21. | திருமிகு த.உதயச்சந்திரன் இ.ஆ.ப., ஆணையர், முதன்மைச் செயலாளர் / ஆணையர் | 27.08.2018<br>01.01.2019 | 31.12.2018<br>07.05.2021 |
| 22. | முனைவர் இரா.சிவானந்தம் ஆணையர் (மு.கூ.பா) | 04.06.2021 | 02.05.2023 |
| 23. | திரு.சே.ரா.காந்தி இ.ஆ.ப., இயக்குநர் (மு.கூ.பொ) | 03.05.2023 | 23.05.2023 |
| 24. | திருமிகு. த.உதயச்சந்திரன் இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / ஆணையர் (மு.கூ.பொ) | 24.05.2023 | |

51

# கணினித் தமிழ்



- முனைவர் க.சண்முகம், சென்னை

*1990 ஆம் ஆண்டுகளில் இணைய யுகம் இணையத்தில், வைய விரி வலை (world wide web) தளங்கள் உருவாகி வலைக் கணினிகள் அபிவிருத்தி அடைந்து ‘ஆகா எழுந்தது பார் யுகப்புரட்சி’ என்றானே பாரதி அதுபோல இணைய யுகப் புரட்சிக்கு வித்திட்டது. முதன்முதலில் 1996ஆம் ஆண்டுதான் இணையத்திற்குத் தமிழ் சென்றது என்பதும் இணையத்தில் ஏற்றப்பட்ட முதல் இந்தியமொழி தமிழ் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த 28 ஆண்டுக்குள் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு இணையத் தொழில்நுட்பமும் அதில் தமிழின் பங்களிப்பும் பெருகி வருகின்றன. சிங்கப்பூரைச் சேர்ந்த திருவாளர் நா.கோவிந்தசாமி அவர்களுக்குத்தான் முதலில் தமிழை இணையத்தில் ஏற்றி வைத்த பெருமை சேரும் என்பது குறிப்பிடத்தக்கது.*

*கணினித்தமிழ் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்காற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர் முனைவர் பொன்ன வைக்கோ அவர்கள். 2001ஆம் ஆண்டு அனைவரும் தமிழ்மொழியைக் கற்க வேண்டும், அறிந்து கொள்ள வேண்டும் என்ற வகையிலும், கணினித்தமிழ் வளர்ச்சிக்காகவும் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியவர். தற்போது தமிழ் இணையக் கல்விக் கழகம் என்று செயல்பட்டு வருகிறது. தமிழக அரசின் தற்போதைய சீரிய நடவடிக்கைகளில் ஒன்றாக மிகச்சிறப்பான அளவில் நடைபெற உள்ள பன்னாட்டுக் கணினித்தமிழ் மாநாடு-2024, தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலமாகத்தான் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முனைவர் பொன்னவைகோ அவர்கள் திருவள்ளுவர் என்ற பெயரில் தமிழ்த் தேடுபொறியை மாணவர்களுடன் இணைந்து வடிவமைத்தவர். மேலும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பக் கழகத்தின் நிதியுதவியுடன் தென்றல் எனும் தமிழ்க் கணிப்பொறி மொழி ஒன்றை உருவாக்கியுள்ளார். எழுத்துரு குறியீட்டைப் பரிசீலிக்கும்போது எழும் தொழில்நுட்பச் சிக்கலுக்குத் தீர்வு காணும் வகையில் பல செயல்பாடுகளை மேற்கொண்டவர். மேலும் பட்டப்படிப்பில் பயில்வோர் எம்மொழியினராயினும் தமிழைக் கட்டாயம் பயிலப் பாடத்திட்டம் வழங்கியவர். தணியாத தமிழ்ப் பற்றால் கணித் தமிழுக்கு வளம் சேர்த்தவர். இணையவழிக் கல்விக்கு முதன் முதலாக வித்திட்டவர். புதிது புதிதாகப் புதுமைகளைப் படைப்பவர். உத்தமம் அமைப்பிற்குப் பெயர் சூட்டியவர். உலகத் தமிழ்த் தகவல் தொழிநுட்ப மன்றத்தின் (உத்தமம்) பல செயல்பாடுகளுக்கும் பல பன்னாட்டுக் கணினித்தமிழ் மாநாடுகளையும் இதன் வழியாக நடத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் முன்னெடுப்புகளையும் செய்து வருகின்றார்.*

*இவர் கணிப்பொறி சார்ந்த பல நூல்களை எழுதியிருக்கிறார், அதிலும்*





குறிப்பாக கணிப்பொறியியல், கணிப்பொறியும் தகவல் தொடர்பியலும் அறிவியல் தமிழ்க் கலைச்சொற்கள், தமிழ்க் கணிப்பொறி மொழிகள் இணையத் தமிழ் வரலாறு போன்றவை கணினித்தமிழை அனைவரும் அறியச் செய்த நூல்களாகும்.

தமிழிலேயே நிரலாக்கம் எழுதி செயல்படுத்தும் வகையில் 2013ஆம் ஆண்டு திரு.முத்து அண்ணாமலை மற்றும் திரு.சொக்கன் ஆகியோர் இணைந்து எழில் தமிழ் நிரலாக்க மொழியினையும் உருவாக்கியுள்ளனர்.

எழில் நிரலாக்கம், தமிழில் எழுதும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள நிரலாக்க மொழியாகும். இதில் தமிழ்க் கலைச் சொற்களைக் கொண்டே நிரல்கள் எழுத முடியும். இது இலவசமாகக் கிடைக்கக்கூடிய ஒரு நிரல் மொழியாகும். இம்மொழி மற்றொரு பிரபல மொழியாகிய பைத்தானுடன் ஒத்து இயங்கும்படி உருவாக்கப்பட்டுள்ளது. பைத்தானின் நிரலகங்களைப் பயன்படுத்தி இயங்கும் இந்த மொழியில், ஆங்கிலத்திலும் நிரல்களை எழுதமுடியும்.

**********





எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே!

# இணையத்தில் இன்பத்தமிழ்!



93



**பாவலர் கருமலைத் தமிழாழன்**

அறிவியலுக் கேற்றமொழி அல்ல வென்னும்
அறிவிலிகள் கூற்றையெல்லாம் பொய்யா யாக்கிச்
செறிவான கணிப்பொறியின் மொழியா யாக்கிச்
செம்மையான குறியீட்டின் எழுத்து மாகி
அறிகின்ற விசைப்பலகை பொதுவா யாகி
அறிஞரெல்லாம் போற்றுகின்ற சொல்தொ குப்பும்
நெறியான மென்பொருளின் தளம மைந்தே
நிகரில்லா இணையமொழி ஆன தின்று!

பிறமொழியின் அறிவெல்லாம் இணையத் தாலே
பிறக்குமினி தமிழினிலே உலகந் தன்னில்
சிறகடிக்கும் புதுமையெல்லாம் ஒருநொ டிக்குள்
சிறப்பாகத் தமிழினிலே பூக்கு மின்று!
வரவாக இவையெல்லாம் தமிழில் சேர
வாய்ப்புதனைத் தந்தவர்நற் 'கலைஞர்' தாமே
சிரமான கலைஞர்தாம் இணையத் துள்ளே
சீர்தமிழைச் சேர்த்ததாலே உயர்ந்தோம் நாமே!

முற்றும்...

# உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்க்கூடல் கருத்தரங்கம்

**மதுரை, ஜூன் 13:** மதுரை உலகத் தமிழ்ச் சங்கம், ஏ.பி.டி. துரைராஜ் மேல்நிலைப் பள்ளி சார்பில், தமிழ்ச் சங்க பெருந்திட்ட வளாகக் கூட்டரங்கத்தில் சிறப்பு தமிழ்க் கூடல் கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.



மதுரை மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடத்தப்பட்ட செம்மொழி நாள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுடன் உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் (பொறுப்பு) ஔவை ந. அருள். உடன், மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குநர் ம. சுசிலா உள்ளிட்டோர்.

நூலக முன்னோடி வே.தில்லைநாயகத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி, இந்தச் சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது. உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் (பொறுப்பு) முனைவர் ஔவை ந. அருள் தலைமை வகித்துப் பேசினார். அப்போது, மறைந்த முன்னாள் முதல்வர்கள் காமராஜர், எம்.ஜி.ஆர். போன்றவர்களால் பாராட்டப்பட்டவர் நூலக முன்னோடி வே. தில்லைநாயகம். இவரின் நூலகப் பணிகளை போற்றும் வகையில் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் அமைய வேண்டும் என்றார்.

கல்வியாளர் க.அரிஅரவேலன் 'வே.தில்லைநாயகத்தின் நூலகத் தமிழ்' என்ற தலைப்பில் பேசினார். அப்போது, தில்லைநாயகத்துக்கு நூலகப் பணிகளில் ஆர்வம் ஏற்பட்ட காரணம், நூலக ஆய்வாளராக, கொடையாளராக, நூலகச் செயல்பட்டாளராக அவர் ஆற்றிய பணிகளை விளக்கிப் பேசினார்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழக நூலகத் தகவல் அறிவியல் துறையின் முன்னாள் பேராசிரியர் ஆதி. ஸ்ரீமுருகன், 'தமிழாய்வுக்கான நுண்ணறிவுக் கருவிகள்' என்ற தலைப்பில் பேசினார். அப்போது, பொது நூலகத் துறையின் தலைவராக தில்லைநாயகம் இருந்தபோது கிராமங்கள்தோறும் நூலகத்தை தோற்றுவித்ததையும், செயற்கை நுண்ணறிவு மூலம் கதை, கவிதை, கட்டுரைகளை உருவாக்குவது குறித்தும் அவர் விளக்கினார்.

**பரிசளிப்பு விழா...** இதையடுத்து, செம்மொழி நாளையொட்டி, மதுரை மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. ஒவ்வோர் பிரிவிலும் முதல் பரிசாக ரூ.10 ஆயிரமும், இரண்டாம் பரிசாக ரூ.7 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.5 ஆயிரமும் வழங்கப்பட்டது.

மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குநர் ம.சுசிலா, ஏ.பி.டி. துரைராஜ் பள்ளி மாணவர்கள், தமிழார்வலர்கள், கவிஞர்கள் திரளாகப் பங்கேற்றனர். உலகத் தமிழ்ச் சங்க ஆய்வறிஞர் முனைவர் சு.சோமசுந்தரி வரவேற்றார். ஆய்வு வளமையர் முனைவர் ஜ.ஜான்சிராணி நன்றி கூறினார்.

தினமணி Sat, 14 June 2025
https://epaper.dinamani.com/c/77555685

# சட்டவியல் அகரமுதலி! 92

**English - Tamil Legal Glossary**

**Dr.Marco A.Fiola**

**Department of Languages , Literatures and Cultures,**

**Ryerson Law Research Centre, Ryerson University**

*891) To sign a legal document or formally approve something*

*endorse* - ஏற்புக் கையொப்பமிடு



*892) Evidence that is relevant and is of such a kind that the court will receive it*

*Admissible evidence* - ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரம்

*893) In criminal law, removal of a case from the usual process. The police or Crown attorney may divert a case if certain conditions are met. There are various formal and informal pre-charge and post-charge diversion programs. Some of these are also referred to as extrajudicial measures or sanctions*

*diversion* - ஏற்றுக்கொள்ளப்பட்ட, மாற்றுவழி, வேறு தண்டனை

*894) unpredictable and subject to whim, often used to refer to judges and judicial decisions which do not follow the law, logic or proper trial procedures*

*capricious* - ஏறுமாறான

*895) The funds paid out by the lawyer for expenses incurred in a lawsuit, such as the costs of pathological assessments and the fees charged by expert witnesses*

*disbursements* - ஏனைய கொடுப்பனவுகள்

*896) The release of the convicted person on certain conditions contained in a probation order*

*suspended sentence* - ஒத்திவைக்கப்பட்ட தண்டனை

*897) When the judge postpones making a decision to research, study the law, or review the evidence presented during the proceeding*

*reserved judgment* - ஒத்திவைக்கப்பட்ட தீர்ப்பு

*898) Postponement of a court hearing to another date*

*adjournment* - ஒத்திவைப்பு

*899) A document given to a judge that lists facts that are agreed upon by parties so that they do not need to be proven by a party*

*statement of agreed facts* - ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மைகள் கூற்று

*900) Term occasionally used to describe the Family Court branch of the Superior Court of Justice*

*Unified Family Court* - ஒருங்கிணைக்கப்பட்ட குடும்ப நீதிமன்றம்

*****

| | |
|---|---|
| 825 | My heartfelt condolences on the sudden demise of you beloved fa–ther and one of my favourite pattimandram naduvar, who I could not meet him during his lifetime..may his soul RIP<br>Somendra IRS |
| 826 | Heartfelt condolences<br>Nirmal K Vijayachandran |
| 827 | Great funeral for a great scholar and statesman<br>Raj Selvendra |
| 828 | My Heartfelt condolences to you and your family. An icon has passed away.<br>Vijayanand |
| 829 | Oh very sorry to hear arul. He is a great support to you. Appavin aathma shanthi adayatum.<br>Leo venkat |
| 830 | Regret the demise of your beloved Father Shri Aavai Natarajan. He created a name for himself and will live in the memories of millions of Tamils around the world. Om Shanthi<br>Leo venkat annamalai |
| 831 | Heart felt condolences Arul Natarajan . May his soul rest in peace.<br>Sudhir Wilson |
| 832 | உலகத்தமிழ் இதழைப் பார்த்து மனம் மிகத் துயரம் அடைந்தது. AVVAI SIR மறைவுக்குப் பிறகு அவர் திருவுருவ படத்தைப் பார்க்க மனத்தில் உறுதியில்லை... நேரில் வருகிறேன் ஒரு நாள்.<br>Pulavar vijayalaxmi |